***கவனிக்க.-*** *08.06.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1763 - 2012 ජූනි මස 15 වැනි සිකුරාදා - 2012.06.15**

*1720 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(அ) – மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 944 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, யூன் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, யூன் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# மாகாண சபை அறிவித்தல்கள்

**தென் மாகாண மாகாண சபை**

*2012 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தென் மாகாண ஆயுர்வேத தேசிய வைத்திய சேவை (திருத்தப்பட்ட) பிரகடனம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தென் மாகாண மாகாண சபையால் 2012.02.28 ஆந் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு 2012.03.14 ஆந் திகதி கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள மேற்கண்ட பிரகடனத்தை அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் இத்தால் வெளியிடுகின்றேன்.

சான் விஜயலால் த சில்வா,
முதலமைச்சரும் சட்டமும் ஒழுங்கும்,
போக்குவரத்து, நீர் விநியோகமும்
வடிகால் அமைப்பும், மின்சக்தி, சுகாதாரமும்
தேசிய வைத்தியமும் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரும்
தென் மாகாணம் மாகாண சபை.

தென் மாகாண மாகாண சபை,
கீழ் டிக்ஸன் வீதி,
காலி,
2012.05.10.

**தென் மாகாண மாகாண சபைக்காக ஆயுர்வேத சுதேச வைத்தியத் திணைக்களம் ஒன்றை அமைப்பதற்கும் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கும்; ஆயுர்வேத சேவைகள் நிபந்தனைகள் ஆக்கஞ் செய்வதற்கான சபை ஒன்றை அமைப்பதற்கும் ஆயுர்வேத நிறுவனம் ஒன்றை அமைப்பதற்காகவும் தென்மாகாணத்தினுள் ஆயுர்வேத வைத்திய முறையை மேம்படுத்துவதற்காகவும் இன்னும் அதற்கு ஏற்புடையதானதும் நேர் எதிர் விளைவு உடையதுமான விடயங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குமான நியதிச் சட்டமொன்று இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கம் கொண்ட ஆயுர்வேதச் சட்டத்திற்கு ஏற்புடையதாகின்றது.**

தென் மாகாண மாகாண சபையால் இவ்வாறு சட்டமாக்கப்படுகின்றது:

சுருக்கப் பெயரும் அமுலாகும் திகதியும்.

1. இந்நியதிச் சட்டம் 2012 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கம் உடைய தென் மாகாண ஆயுர்வேத மற்றும் சுதேச வைத்திய நியதிச் சட்டம் என அழைக்கப்படுவதுடன், தென்மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து அதிகாரபூர்வமாகின்றது.

## *I* ஆம் பாகம்

**தென் மாகாண ஆயுர்வேத மற்றும் சுதேச வைத்தியத் திணைக்களம் தாபித்தல்.**

தென் மாகாண ஆயுர்வேத மற்றும் சுதேச வைத்தியத் திணைக்களம் அமைத்தல்.

2. (இந்நியதிச் சட்டம் இதன் பின்னர் திணைக்களம் என அழைக்கப்படுகின்ற) ஆயுர்வேத மற்றும் சுதேசிய வைத்தியத் திணைக்களம் என அழைக்கப்படுகின்ற திணைக்களம் ஒன்று இந்நியதிச் சட்டத்தின் 4 ஆவது பிரிவில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்களைச் செய்வதற்காக அமைக்கப்படல் வேண்டும்.

மாகாண ஆயுர்வேத மற்றும் சுதேச வைத்திய ஆணையாளரை நியமித்தல்.

3. (1) திணைக்களத்தின் முதல்வராக வேண்டிய (இந்நியதிச் சட்டத்தின் இதன் பின்னர் மாகாண ஆணையாளர் என அழைக்கப்படுகின்ற) ஒருவர், மாகாண ஆயுர்வேத மற்றும் சுதேச வைத்திய ஆணையாளர் என அல்லது அவருக்காக கடமை புரிகின்ற ஒருவர் என நியமித்தல் வேண்டும்.

(2) திணைக்களத்தின் நோக்கத்தை அடைவதற்காகத் தேவைப்படுகின்ற பிரதி ஆயுர்வேத ஆணையாளர் ஒருவரும் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்காக உதவி ஆணையாளர்களும் உத்தியோகத்தர் ஆளணித் தொகை ஒன்றும் நியமிக்க முடியும்.

(3) மாகாண ஆணையாளரால் தமது அதிகாரங்கள் எதனையும் திணைக்களத்தின் உதவி ஆணையாளருக்கு அளிக்க முடியும்.

4. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தங்களுக்கு இணங்க கீழ்காணும் நோக்கங்களைச் செயற்படுத்துவது இத்திணைக்களத்தின் பொறுப்பு ஆகும். அதாவது, திணைக்களத்தின் நோக்கம்.

(அ) பொது மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தலும் மேம்படுத்தும் நோக்கில் ஆயுர்வேத வைத்திய முறையை தென் மாகாணத்தினுள் உயர்வடையச் செய்வதும் அபிவிருத்தியாக்கலும்;

(ஆ) தென் மாகாண சபையின் வருமானத்திற்குரிய வழியொன்றாக ஆயுர்வேத வைத்திய முறைமை உயர்வடையச் செய்தல்;

(இ) இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்படுகின்ற ஆயுர்வேத நிறுவனங்களை முழுமையாகவே முகாமைப்படுத்தலும் நிருவாகஞ் செய்தலும்.

## *II* ஆம் பாகம்

### ஆயுர்வேத நிறுவனங்கள் (அமைப்பு)

5(1) எவர் ஒருவராலும் : ஆயுர்வேத நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

மாகாண அமைச்சர் அவர்களால் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தல் ஒன்றின் மூலம் குறிப்பிடப்படும் தினத்தன்று அல்லது அதன் பின்னர் -

(அ) மாகாண ஆணையாளர் அவர்களால் விநியோகிக்கப்படுகின்ற பதிவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆயுர்வேத நிறுவனங்களை நடாத்திச் செல்வதற்காக குறிப்பிட்ட நபருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டாலன்றி இன்னும்;

(ஆ) ஏதாவது ஓர் இடத்தில், இனங் கண்ட ஆயுர்வேத நிறுவனம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்காக இனங் கண்ட இடம் ஒன்று என மாகாண ஆயுர்வேத ஆணையாளர் இடத்தில் தற்போதைக்கு பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி எவர் ஒருவராலும் எந்தவொரு ஆயுர்வேத நிறுவனம் ஒன்றையும் நடாத்துதலும் அல்லது நடைமுறைப்படுத்தலும் முடியாது.

(2) (1) ஆவது உப பிரிவில் ஏற்பாடுகளை மீறுகின்ற எவர் ஒருவராவது குற்றத்திற்கு குற்றவாளியாவதுடன், நீதிபதி ஒருவரின் முன்னிலையில் நடாத்தப்படும் சுருக்கமான வழக்கு விசாரணையில் குற்றவாளியாகும்போது, இரண்டு இலட்சம் ரூபாய்களுக்குக் கூடாத அபராதத்திற்கு அல்லது மூன்று மாதங்களுக்குக் கூடாத சிறை வாசத்திற்கு அல்லது குறித்த அபராதத்திற்கும் சிறை வாசத்திற்கும் (இரண்டிற்கும்) ஆளாகுதல் வேண்டும்.

6. (1) (அ) ஆயுர்வேத நிறுவனம் ஒன்றைப் பதிவு செய்வதற்காக உரிய சகல விண்ணப்பப் பத்திரமும் உரிய படிவங்களில் குறித்த கட்டணத்துடனும் குறித்த வேறு அனைத்து ஆவணங்களுடனும் மாகாண ஆணையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். பதிவு செய்யும் ஒழுங்கு நடைமுறை.

(ஆ) (அ) பந்தியில் குறிப்பிடப்படுகின்ற கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

(2) மாகாண ஆணையாளர் அவர்களால் (1) வது உப பிரிவின் கீழ் விண்ணப்பம் கிடைத்ததன் பின்னர், இந்நியதிச் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் கீழ் அமைக்கப்படுகின்ற ஆயுர்வேத சேவைகள் ஆயுர்வேத சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் அவதானக் குறிப்புகள் அடங்கிய குறித்த படிவங்களில் உள்ள அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படி அச்சபையிடமிருந்து வேண்டப்படல் வேண்டும்.

(3) (2) வது உப பிரிவில் குறிப்பிட்ட மாகாண ஆணையாளர் அவர்களின் வேண்டுதல் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் ஆயுர்வேத சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையால் அவதானக் குறிப்பு அறிக்கை ஒன்றை மாகாண ஆணையாளருக்குப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

(4) மாகாண ஆணையாளர் அவர்களால் அவரது எழுத்தினாலான அதிகாரத்தைப் பெற்ற ஒருவரால் அல்லது சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் ஒரு உறுப்பினர் ஒருவரால் அல்லது சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் எழுத்தினாலான அனுமதியைப் பெற்ற ஒருவரால், இப்பிரிவில் கருமங்களுக்காக முன் அறிவித்தல் உடன் அல்லது முன்அறிவித்தல் இன்றி அனைத்து நியாமமான நேரங்களில், இனங் கண்ட ஆயுர்வேத நிறுவனமாக பதிவு செய்வதற்கு எதிர்பார்ப்புள்ள இடத்திற்கு உட்புகவும் அவ்விடத்தைப் பரிசீலனை செய்வதற்கும், விண்ணப்பதாரரிடம் அல்லது அவ்விடத்திவ் உள்ள எவரொருவரிடமும் வினாக்களை கேட்டறியவும் முடியும்.

(5) மாகாண ஆணையாளர் அவர்களால் சட்ட ஒழுங்கமைப்புக் கட்டுப்பாட்டுச் சபையின் அறிக்கையையும் மற்றும் ஏனைய அனைத்து ஏற்புடையதான பொருத்தமானவற்றைக் கவனத்தில் எடுக்கப்பட்டதன் பின்னர் -

(அ) ஆயுர்வேத நிறுவனத்தைப் பதிவு செய்து, குறித்த விண்ணப்பதாரர் அந்நிறுவனத்தை முகாமைத்துவம் செய்வதற்கும்; நிருவாகஞ் செய்வதற்கும், பொறுப்புடையவர் எனக்குறிப்பிட்டு விண்ணப்பதாரருக்கு பதிவுச்

சான்றிதழ் ஒன்றை விநியோகிப்பதற்கும்; அவ்விடத்தில் அந்த ஆயுர்வேத நிறுவனத்தை நடாத்த வேண்டிய இடமெனப் பதிவு செய்தற்கும் அல்லது;

(ஆ) விண்ணப்பப்பத்திரத்தை நிராகரித்து அதை நிராகரிப்பதற்குரிய காரணத்தையும் விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலம் அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(6) (அ) விண்ணப்பப்பத்திரத்தை நிராகரித்தமை பற்றிய மாகாண ஆணையாளரின் முடிவு சம்பந்தமாக அதிருப்தியுறும் ஒருவரால் குறித்த முடிவை தமக்கு அறிவித்த திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்கு அம்முடிவுக்கு எதிராக மாகாண அமைச்சருக்கு மேன்முறையீடு செய்ய முடியும்.

(ஆ) அமைச்சர் அவர்களால் குறித்த மேன்முறையீடு தமக்கு கிடைத்ததிலிருந்து ஒரு மாதத்திற்குள் தமது முடிவை விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

(7) (அ) இப்பிரிவில் குறிப்பிடப்பட்ட பதிவுச் சான்றிதழை வருடாவருடம் புதுப்பித்தல் வேண்டும்.

(ஆ) வருடாந்த பதிவுச் கட்டணத்தை அமைச்சர் அவர்களால் கட்டளை மூலம் குறிப்பிட முடியும்.

ஆயுர்வேத நிறுவனம் அமைப்பு.

7. இந்நியதிச் சட்டத்தின் கருமங்களுக்காக ஆயுர்வேத நிறுவனங்கள் என்பது,

(அ) ஆயுர்வேத ஆஸ்பத்திரி ஒன்று;
(ஆ) ஆயுர்வேத சிகிச்சை நிலையம் அல்லது மருத்துவசாலை;
(இ) ஆயுர்வேத இளைப்பாற்று விடுதி;
(ஈ) ஆயுர்வேத உடம்பைத் தேய்த்துப் பிடிக்கும் நிலையம்;
(உ) ஆயுர்வேத மருந்தகம் (விற்பனை நிலையம்);
(ஊ) ஆயுர்வேத மூலிகைத் தோட்டம் மருந்துத் தோப்பு ஆகியனவாகும்.

ஆயுர்வேத நிறுவனங்கள் சம்பந்தமான ஆணையாளரின் அதிகாரங்களும் காரியங்களும்.

8 (1) மாகாண ஆணையாளர் அவர்களால்,

(அ) தென் மாகாணத்தினுள் ஆயுர்வேத நிறுவனங்களை அமைத்து நடாத்துதலும் அமைத்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்தலும் பராமரித்தலும்;

(ஆ) இந்நியதிச் சட்டத்தில் பதிவு செய்யப்படுகின்ற ஆயுர்வேத நிறுவனங்களுக்கு ஏற்புடையதான ஏடுகள், தரவுகள் ,புள்ளி விபரங்கள் என்பனவறறை ஒழுங்காகத் திரட்டுதல், பராமரித்தல், பாதுகாத்தல், உறுதிப்படுத்துதல்;

(இ) அனைத்து ஆயுர்வேத நிறுவனங்களாலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய உரிய தரங்களை உறுதியாகக் குறிப்பிடல்.

(ஈ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்ற ஆயுர்வேத நிறுவனங்கள், இந்நியதிச் சட்டத்தின் ஒழுங் கமைப்பு முறைகளுக்கு ஏற்றவாறு முகாமைத்துவம் செய்யப்படுகின்றது எனவும் நடைமுறைப்படுத்தப் படுகின்றது எனவும் உறுதிப்படுத்தல்.

(2) இந்நியதிச் சட்டத்தின் கீழ் தமது அதிகாரங்களையும் கருமங்களையும் செயற்படுத்தும் போதும் கருமமாற்றும் போதும் ஆணையாளர் அவர்கள் மாகாண அமைச்சர் அவர்களால் அவ்வப்போது வெளியிடப்படும் போதுமான விசேடமான ஏற்பாடுகளுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

கட்டளைகள்

9. மாகாண அமைசச்ர் அவர்களால் கீழ்க்காணப்படும் அனைத்து விடயங்களுக்காகவும் அல்லது அவற்றில் சிலவற்றிற் காகவும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட முடியும்:-

(அ) ஆயுர்வேத நிறுவனமொன்றைப் பதிவு செய்வதற்காக எதிர்பார்க்கப்படும் இடம் ஒன்றினுள் நடாத்தப்பட வேண்டப்படுகின்ற தரங்கள்;

(ஆ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்ற ஆயுர்வேத நிறுவனமொன்றுக்குள் பின்பற்றப்பட வேண்டிய நியதிகளும் நிபந்தனைகளும் இன்னும் அந்நிறுவனங்களை உரிய முறையில் பராமரித்தல் செய்தலும் பரிபாலனஞ் செய்தலும்;

(இ) நியதிச் சட்டத்தின் கீழ் முன் வைக்கப்பட வேண்டிய விண்ணப்பப்பத்திரங்களின் மாதிரியும் அதில் அடங்க வேண்டிய விபரங்களும்;

(ஈ) பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத நிறுவனம் ஒன்றில் பேணி வைக்கப்பட வேண்டிய மற்றும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அறிக்கைகளும் புத்தகங்களும்;

(உ) இந்நியதிச் சட்டத்தில் இப்பகுதியின் கீழ் ஆணையாளரால் வைக்கப்பட வேண்டிய நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பதிவேடுகளில் உள்ளடக்க வேண்டிய தகவல்கள்.

(ஊ) ஆயுர்வேத நிறுவனங்கள் சம்பந்தமான அவ்வப்போது முன்வைக்கப்பட வேண்டிய அறிக்கைகளும், குறித்த நிறுவனங்களுக்கு உள்ளாக்கப்பட்ட அல்லது குறித்த நிறுவனங்களில் சிகிச்சை பெற்ற நபர்களின் எண்ணிக்கை, அவர்களது விபரங்கள் அவற்றில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆளணி பற்றிய விபரங்களுடன் குறித்த அறிக்கையில் உட்படுத்தப்பட வேண்டிய தகவல்கள் ;

(எ) பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத நிறுவனங்களுக்கு உட்பிரவேசிப்பதற்கும் அவற்றினை பரிசீலனை செய்வதற்குமான அதிகாரங்கள் ;

(ஏ) பதிவு செய்யப்பட்ட உள்வாரியான நோயாளியாகவோ, வெளிவாரியான நோயாளியாகவோ இனங் கண்ட நிறுவனம் ஒன்றால் சேவையைப் பெற்றுக் கொண்டவர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்கள் ;

(ஐ) சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி ஆயுர்வேதத்தின் மேம்பாட்டுக்கு அவசியமென மாகாண ஆணையாளர் அவர்களால் முடிவு செய்யப்படுகின்ற விடயம்.

## *III* ஆம் பாகம்

### ஆயுர்வேத சேவைகள் சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபை

*தென் மாகாண ஆயுர்வேத சேவைகள் சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபை தாபித்தல்.*

10. அமைச்சர் அவர்களால் (இதில் இதன் பின்னர் ''சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபை'' என அழைக்கப்படுகின்ற) தென் மாகாண ஆயுர்வேத சேவைகள் சட்ட ஒழுங்கமைப்பு கடடுப்பாட்டுச் சபை என அழைக்கப்படுகின்ற சபையொன்றைத் தாபித்தல் வேண்டும்.

*சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் அமைப்பு.*

11. (1) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச்சபை கீழ்க்காணும் அங்கத்தவர்களை உள்ளடக்கியதாகும். அதாவது -

(அ) மாகாணத்தின் ஆணையாளர் சபையின் தலைவராக இருத்தல் வேண்டும்;

(ஆ) ஆயுர்வேத விடயத்தைப் பங்கிட்டளிக்கப்பட்ட மாகாண அமைச்சரின் காரியதரிசி அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்பட்ட ஒரு நபர் ;

(இ) பொலிஸ் மா அதிபரினால் பெயர் குறிப்பிட வேண்டிய தற்போது தென் மாகாணத்தினுள்கடமை புரியும் பிரதி பொலிஸ் மா அதிபர்;

(ஈ) பொலிஸ் மா அதிபரினால் பெயர் குறிப்பிட வேண்டிய தற்போது தென் மாகாணத்தினுள் கடமை புரியும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் ;

(உ) தென் மாகாண சபையின் பிரதான சட்ட உத்தியோகத்தர்;

(ஊ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கம் கொண்ட சுற்றுலாச் சட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட சுற்றுலா (உல்லாசத்துறை) மேம்பாட்டு அதிகார சபையின் தலைவரால் பெயர் குறிப்பிடப்படுகின்ற அவ்வதிகார சபையின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் ;

(எ) 1894 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கை கட்டளை (தர) பணியகச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இலங்கைக் கட்டளைப் பணியகப் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் ;

(ஏ) மாகாண அமைச்சர் அவர்களால் பெயர்கள் குறிப்பிட வேண்டிய ஆயுர்வேத வைத்திய துறையை தொழிலாகக் கொண்ட பத்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவமுடைய மற்றும் மாகாணத்தில் தொழில் புரிகின்ற பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்கள் மூவர்;

(ஐ) முதலமைச்சர் அவர்களால் பெயர் குறிப்பிடப்பட வேண்டிய தென் மாகாணத்தில் தொழில் புரிகின்ற பதினைந்து வருடங்களுக்கு மேல் தொழில் அனுபவமுடைய வழக்கறிஞர் ஒருவரால் ;

(2) (1) வது உப பிரிவில் (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ) மற்றும் (எ) பந்திகளில் குறிப்பிடப்படுகின்ற உறுப்பினர்கள் உத்தியோகபூர்வ அதிகாரத்தினால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள் இதன் பின்னர் இந்நதியதிச் சட்டத்தில் குறிப்பிடப்படுவதுடன் (ஏ), (ஐ) பந்திகளில் குறிப்பிடப்படுகின்ற உறுப்பினர்கள் நியமன உறுப்பினர்கள் என இதன் பின்னர் இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றது.

பதிவாளரும் ஏனைய ஆளணி நியமனமும்.

12. (1) (அ) மாகாணத்தின் அமைச்சர் அவர்களால் (இதில் இதன் பின்னர் "பதிவாளர்" என அழைக்கப்படுகின்ற) தொழில் தகைமையுடைய ஒருவர் சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் பதிவாளராக நியமிக்கப்பட வேண்டியதுடன் அவர் சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் பிரதம நிருவாக உத்தியோகத்தராகவும் இருத்தல் வேண்டும்;

(ஆ) பதிவாளர் சட்ட ஒழுங்கமைப்பு கட்டுபாட்டுச் சபையின் அனைத்து முடிவுகளையும் நடைமுறைப்படுத்துவதன் பொறுப்பு உடையவராக இருத்தல் வேண்டும்;

(இ) பதிவாளருக்கு சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் ஏதாவதொரு சட்டத்தில் பிரசன்னமாக இருப்பதற்கும் எண்ணங்களை வெளிப்படுத்தவும், உரிமை உள்ளதுடன் வாக்களிக்கும் உரிமை இல்லாதிருத்தல் வேண்டும்;

(ஈ) பதிவாளரின் பதவியில் ஒரு வெற்றிடம் ஏற்படின் (1) வது உபபிரிவின் கீழ் நியமனம் ஒன்று செய்யும் வரை மாகாண அமைச்சர் அவர்களால் சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் நியமன உறுப்பினர் ஒருவரை அவ்வெற்றிடத்திற்கு நியமித்தல் வேண்டும்.

(2)(அ) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையால் அமைச்சர் அவர்களை கலந்தாலோசித்து மாகாண அமைச்சர் சபையின் இணக்கப்பாட்டின் பேரில் சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் கருமங்களைச் செய்வதற்காகத் தேவைப்படுகின்ற வேறு உத்தியோகத்தர்களையும் வேலை (ஆளணி)யாட்களையும் நியமனஞ் செய்ய முடியும்;

(ஆ) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் உத்தியோகத்தர்களுக்கும் வேலையாட்களுக்கும் மாகாண அமைச்சர் அவர்களால் நிதி விடயங்களுக்கும் பொறுப்புடைய மாகாண அமைச்சின் மாகாண அமைச்சரைக் கலந்தாலோசித்து நிர்ணயிக்கப்படுகின்ற விதத்தில் ஊதியம் கொடுக்கப்படல் வேண்டும்.

சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் காரியங்களும் கருமங்களும்.

13. சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையால் கீழ்க்காணும் அதிகாரங்களும், காரியங்களும், செயற்பாடுகளும், நடைமுறைப்படுத்தல்களும் செய்யப்படல் வேண்டும்:-

(அ) ஆயுர்வேத நிறுவனத்தினுள் நோயாளர்களைப் பாதுகாப்புடன் பராமரிப்பதற்காக வேண்டிய இரக்க சிந்தை ஏற்படுத்தக்கூடிய விதத்திலான சட்டங்களை ஆக்குதல், கட்டுப்படுத்துதல்;

(ஆ) உரிய சுகாதாரத் தகவல்களையும் புள்ளி விபரத் தகவல்களையும் ஒன்று திரட்டுதலும், பிரசுரித்தலும்;

(இ) ஆயுர்வேத நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற வசதிகளுக்கேற்றவாறு குறிப்பிட்ட நிறுவனங்களை தரப்படுத்துதல் முறையொன்றை அமுல் நடத்துதல்;

(ஈ) மாகாண ஆணையாளர் அவர்களால் அறிவுரைகள், ஆலோசனைகள், உதவிகள் வேண்டப்படும் போது அவருக்கு அறிவுரைகள், ஆலோசனைகள் பெற்றுக் கொடுத்தல் அல்லது உதவியளித்தல்;

(உ) இந்நியதிச் சட்டத்தின் காரிய கருமங்களை செய்யும்போது தேவைப்படுகின்ற விஞ்ஞான ரீதியிலான தொழில்நுட்ப மற்றும் விசேட நிபுணத்துவ உதவிகள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளல். மேலும் ;

(ஊ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத நிறுவனங்கள் இந்நியதிச் சட்டத்தின் மூலம் ஒழுங்கமைப்புச் செய்யும் கட்டளைத் தரங்களுக்கும் குறிப்பிட்ட திட்டங்களுக்கும் ஏற்ப நடைமுறைப்படுத்தப் படுகின்றது என்பதை உறுதிப்படுத்துதல்.

சட்ட ஒழுங் கமைப்பு கட்டுப் பாட்டுச் சபைக் குரிய கோரம்.

14.சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் ஏதாவது ஒரு கூட்டத்திற்கான கோரம் ஆறு உறுப்பினர்களாகும்.

சட்ட ஒழுங்கமைப் புக் கட்டுப்பாட்டுச் சபையின் கருமங் களையும் காரியங் களையும் பிரதி நிதித்துவப்படுத் துதல் (அளித்தல்).

15. சட்ட (ஒழுங்கமைப்புக் கட்டுப்பாட்டுச் சபையால் அவ்வாறு செய்தல் அவசியமென கருதுமிடத்து; இந்நியதிச் சட்டத்தின் கீழான தமது கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்காக இச்சபையின் உறுப்பினர் ஒருவருக்கு அல்லது இச்சபையால் நியமிக்கப்படுகின்ற கமிட்டி ஒன்றுக்கு பொறுப்பளிக்க முடியுமாவதுடன் குறிப்பிட்ட உறுப்பினரால் அல்லது குறிப்பிட்ட கமிட்டியால் அக்கருமங்களையும் காரியங்களையும் இச்சபையின் பொதுவான அல்லது விசேட கட்டளையின் கீழ் செயற்படல் வேண்டும்.

*உட்பிரவேசிக்கவும் பரிசீலனை செய்யவும் உள்ள அதிகாரங்கள்.*

16. (1) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் தலைவரால் அல்லது தலைவர் அவர்களினது எழுத்து மூலமான அனுமதியைப் பெற்ற ஒருவரால் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இரவு வேளையில் அல்லது பகல் வேளையில் எந்நேரத்திலாவது முன் அறிவித்தலின்றி ஓரிடத்திற்குப் பிரவேசித்து,

(அ) அவ்விடத்தைப் பரிசீலனை செய்ய;

(ஆ) அவ்விடத்திற்கான ஒருவரிடம் அல்லது நோயாளியிடம் விசாரணை செய்ய;

(இ) அதனுள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பதிவேடுகளை அல்லது அறிக்கைகளைப் பரிசீலனை செய்ய அப்பதிவேடுகளின் அல்லது அறிக்கைகளின் பிரதிகளைப் பெற;

(ஈ) அவ்விடத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஒருவருக்கு இந்நியதிச் சட்டத்திற்கு அமைய கருமமாற்றக்கூடிய விதத்தில் ஏற்புடைய முயற்சிகளைச் செய்வதற்கு உத்தரவிடல்.

(2) ஆயுர்வேத நிறுவனத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஒருவரால் மற்றும் அந்நிறுவனத்திலுள்ள அனைவராலும் (1) வது உப பிரிவில் குறிப்பிட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அனைதது நியாயமான உதவிகளைச் செய்யப்பட வேண்டியதுடன் அவர்களால் கேட்கப்படுகின்ற அறிக்கைகளின் பிரதிகளையும் அல்லது தகவல்களையும் கொடுக்கப்படல் வேண்டும்.

*சட்ட ஒழுங்கமைப் புக் கட்டுப்பாட்டுச் சபையால் பொலிஸ் உதவி பெறல்.*

17. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் கருமங்களையும் காரியங்களையும் செய்யும் போது இச்சபையால் பொலிஸாரின் உதவியை வேண்டப்பட முடியும். அவ்வாறு வேண்டப்படுமிடத்து உதவி பெற்றுக் கொடுத்தல் பொலிஸாரின் கடமையாதல் வேண்டும்.

(2) தலைவர் அவர்களோ அல்லது 16 ஆவது பிரிவின் கீழ் உள்ள அதிகாரங்களின் கீழ் கருமமாற்றுகின்ற அனுமதி பெற்ற ஒருவரோ இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்றவர்கள் பற்றி உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவித்தல் கொடுக்க வேண்டியதுடன் இந்நியதிச் சட்டத்தின் எந்த ஒரு ஏற்பாட்டையாவது மீறுகின்ற ஒருவருக்கு எதிராக பொலிஸாரால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படல் வேண்டும்.

*தொல்லைகளை ஏற்படுத்தும் நடத்தைகள் குற்றமாகும்.*

18. (1) தொல்லைகளை ஏற்படுத்தும் அல்லது அளவு கடந்த அல்லது; கட்டுப்பாடுகளை மீறுகின்ற 16 ஆவது பிரிவின் கீழான அதிகாரத்தின் கீழ் செயற்படுகின்ற ஒரு (அனுமதி) அதிகாரம் பெற்ற ஓர் உத்தியோகத்தர்அல்லது வேலையாள் ஒருவர் குற்றமொன்றுக்கு குற்றவாளியாகுவதுடன் நீதிபதியின் முன்னிலையில் நடைபெறும். சிறு வழக்கு விசாரணையின்போது குற்றவாளியாக்கப்படும்போது அந்நபர் ரூபா ஐம்பதாயிரத்துக்கு கூடாத அபராதத்திற்கும் மூன்று மாதங்களுக்குக் கூடாத சிறைவாசத்திற்கு அல்லதுஅபராதம் சிறைவாசம் ஆகிய இரண்டிற்கும் ஆளாகுதல் வேண்டும்.

(2) இந்நியதிச் சட்டத்தில் அளிக்கப்பட்ட ஒரு பொதுவான அல்லது விசேட அதிகாரத்தின் கீழ் செயற்படுகின்ற ஓர் உத்தியோகத்தருக்கு நியாயமான அல்லது சட்டபூர்வமான காரணங்கள் இல்லாமல் கீழப்படியாத இடைஞ்சல் விளைவிக்கின்ற ஒருவர் குற்றமொன்றுக்கு குற்றவாளியாகுவதுடன் நீதிபதி ஒருவர் முன்னிலையில் நடைபெறும் சிறு வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாக்கப்படும் போது ஐம்பதாயிரம் ரூபாய்களுக்குக் கூடாத அபராதத்திற்கு அல்லது ஆறு மாதங்களக்குக் கூடாத சிறைவாசத்திற்கு அல்லது அபராதம் சிறைவாசம் ஆகிய இரண்டிற்கும் ஆளாகுதல் வேண்டும்.

*சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் கருமங்களை நடாத்திச் செல்வதற்குரிய வேறு விடயங்கள்.*

19. இந்நியதிச் சட்டத்தின் அட்டவணையின் ஏற்பாடுகள் கீழ்க்காணும் விடயங்களுக்கு அதாவது -

(அ) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் உறுப்பினர்களின் பதவி காலம் ;

(ஆ) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் உறுப்பினர்களின் பதவி காலம் ;

(இ) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் வெற்றிடங்களை நிரப்புதல்;

(ஈ) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் கூட்டங்களை உரிய பிரகாரம் நடாத்துதல்;

(உ) சட்ட ஒழுங்கமைப்புக் கட்டுப்பாட்டுச் சபையின் முடிவுகளை செல்லுபடியாக்கச் செய்தல்;

(ஊ) சட்ட ஒழுங்கமைப்புக் கட்டுப்பாட்டுச் சபையின் இலச்சினை (முத்திரை);

(எ) இச்சபையின் உறுப்பினர் ஒருவராக நியமனம் பெற இருக்க வேண்டிய தகைமைகள் ;

(ஏ) இச்சபையின் அதிகாரங்களை அளித்தல்;

(ஐ) இச்சபையின் உறுப்பினர்களுக்கு ஊதியம்;

(ஒ) இச்சட்டத்தின் கீழ் சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் பேரில் அல்லது இச்சபையால் எடுக்கப்படுகின்ற செயற்பாடுகளைப் பாதுகாத்தல்;

(ஓ) இச்சபைக்கு எதிராக விநியோகிக்கப்படும் அழைப்பாணைப் பத்திரம் ;

(ஔ) சட்ட ஒழுங்கமைப்புக் கட்டுப்பாட்டுச் சபை அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம் ஆதல் வேண்டும்.

## *IV* ஆம் பாகம்

### ஆயுர்வேத சேவைகள் பணியாளர்கள் (ஈடுபாடுடையோர்)

*ஆயுர்வேத சேவைகள் பணி யாளர்களைப் பதிவு செய்தல்.*

20. (1) மாகாண அமைச்சர் அவர்களால் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகின்ற உத்தரவின் மூலம் குறித்த விடயத்திற்காக நியமிக்கப்படுகின்ற தினத்தன்று அல்லது அதற்குப் பின்னர் எவரொருவரும் குறித்த நபர் சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபை தற்போது பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி தென் மாகாணத்தினுள் ஆயுர்வேத சேவைகள் பணியாளர் (ஈடுபாடுடைவர்) ஆகக் கருமமாற்ற முடியாது.

(2) (1) ஆவது பிரிவுகளை மீறுகின்ற எவர் ஒருவராயினும் குற்றத்திற்கு குற்றவாளியாகுவதுடன் நீதிபதியால் நடாத்தப்படும் சுருக்கமான வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாக்கப்படும் போது ஐம்பதாயிரம் ரூபாய்களுக்குக் கூடாத அபராதத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்குக் கூடாத சிறைவாசத்திற்கு அல்லது அபராதம் சிறைவாசம் ஆகிய இரண்டிற்கும் ஆளாகுதல் வேண்டும்.

*ஆயுர்வேத சேவைகள் (ஈடுபாடுடையவர்கள்) பணியாட்கள்.*

21. இந்நியதிச் சட்டத்தின் கருமங்களுக்காக ஆயுர்வேத சேவைகள் பணியாட்கள் என்போர்,

(அ) ஆயுர்வேத மருந்து வகைகளை விநியோகிப்பவர்கள்;
(ஆ) ஆயுர்வேத ஊதியர்கள்;
(இ) ஆயுர்வேத உடல் தசைபிடிப்போர் ஆகியோர் உட்படுவர்.

*ஆயுர்வேத சேவை கள்பணியாட்க ளாக பதிவு செய்வதற்கு விண்ணப்பித்தல்.*

22. (1) ஆயுர்வேதப் பணியாளர் (ஈடுபடுபவர்) ஆக உரிய பதிவேட்டில் பதிவு செய்வதற்காகவுள்ள அனைத்து வேண்டுதல் (விண்ணப்பங்)களும் எழுத்து மூலமும், உரிய முறையிலும் கட்டுப்பாட்டு சபையின் பதிவாளருக்கு முன்வைத்தல் வேண்டும். குறிப்பிட்ட விண்ணப்பப்பத்திரத்தை உரிய ஆவணங்களுடன் முன் வைத்தல் வேண்டும்.

(2) ஆயுர்வேத சேவைகள் பணியாள் ஒருவராக செய்யப்பட்ட ஒரு பதிவு கட்டுப்பாட்டு சபையால் முன்னமே செல்லுபடியற்றதாக செய்யப்பட்டிருந்த ஒருவருக்கு பதிவுக்காக மீண்டும் விண்ணப்பிக்க முடியுமாவதுடன் கட்டுப்பாட்டு சபையால் குறித்த விண்ணப்பம் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப பரிசீலனை செய்யப்பட்டு சரியானதைச் செய்தல் வேண்டும்.

*பதிவாளர்.*

23. (1) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையால் கீழ்க்காணும் ஆயுர்வேத பணியாட்களாக,

(அ) ஆயர்வேத மருந்து வகைகள் விநியோகிக்கப்படுத்தல்;
(ஆ) ஆயுர்வேத ஊழியர்கள் ;
(இ) ஆயுர்வேத உடல் (தசை) பிடிப்பாளர்கள்.

ஆகியோர்களைப் பதிவு செய்வதற்கு தனித்தனியான பதிவேடுகளை வைத்திருத்தல் வேண்டும்.

(2) (1) ஆவது உப பிரிவில் குறிப்பிட்ட பதிவுப் புத்தகத்தை உரிய முறையில் பாதுகாத்து நடைமுறைப்படுத்தல் சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டு சபையின் பதிவாளர் அவர்களின் பொறுப்பாகும்.

(3) 24 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சர் "அவர்கள் சட்ட ஒழுங்கமைப்புக் கட்டுப்பாட்டுச் சபையுடன் கலந்தாலோசனை செய்து உப பிரிவில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வகையிலான ஆயுர்வேத பணியாட்களாகப் பதிவு செய்வதற்கு ஒரு நபருக்குத் தேவைப்படுகின்ற தகைமைகளை நிர்ணயஞ் செய்து கட்டளைகளைப் பிறப்பிக்க முடியும்.

*ஆயுர்வேத சேவைகள் பணியாட்களைப் பதிவு செய்வதற்கு தேவையான தகைமைகள்.*

24. எந்த ஒரு நபரும் குறித்த நபர்-

(அ) இலங்கைப் பிரஜையாக இருப்பின் ;

(ஆ) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் உரிய களத்தில் கற்கை நெறியொன்றை கற்றதன் பின்னர் அந்நிறுவனத்தினால் விநியோகஞ் செய்யப்பட்ட சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருப்பின்; இன்னும்,

(இ) சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஆயுர்வேத தாதி சேவை, ஆயுர்வேத மருந்து வகைகள் விநியோகஞ் செய்தல், ஆயுர்வேத ஊழியம், ஆயுர்வேத உடல் (தசை) பிடித்தல் சிகிச்சை நோய் நீக்கல் துறை ஆகிய துறைகளில்

திறமையாக ஈடுபட்டு போதிய அறிவையும் அனுபங்களையும் பெற்றுள்ளவரென சட்ட ஒழுங்கமைப்புக் கட்டுப்பாட்டுச் சபை திருப்தியுறுமாயின், தவிர ஆயுர்வேத சேவைகள் பணியாள் ஒருவராக பதிவு செய்வதற்கு உரித்துடையவர் அல்லர்'

*பதிவு செய்தல் சேவை நிராகரித் தல் செல்லுபடி யற்றதாக்குதல் அல்லது இடை நிறுத்தஞ் செய்தல்.*

25. ஒரு ஆயுர்வேத சேவைகள் பணியாள் (ஈடுபடுபவர்) ஒருவர் அவ்வாறான பணியாள் நிலையில் ஒழுக்கக் கேடான சீரற்ற நடத்தை காரணமாக குற்றவாளியெனக் கண்பிடிக்கும் சந்தர்ப்பத்தில் சட்ட ஒழுங்கமைப்புக் கட்டுப்பாட்டுச் சபையால் குறிப்பிட்ட சேவைப் பணியாள் பதிவுக்காக முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிராகரிக்க அல்லது அவ்வாறான பதிவு செய்யப்பட்டிருக்கும் ஒன்றை செல்லுபடியற்றதாக்க குறிப்பிட்ட காலத்திற்கு இடைநிறுத்தஞ் செய்ய முடியும்.

*பதிவு செய்துள்ள ஆயுர்வேத சேவைகள் பணியாட்களுக்கு தொழிலில் ஈடுபட உரித்துண்டு.*

26. பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து ஆயுர்வேத சேவைகள் பணியாட்களுக்கும் அச்சேவையில் ஈடுபடுதல் (பணியாள்) இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பின் களத் தொடர்பு சம்பந்தமாகவும், அக்களத்தில் தென் மாகாண சபை பிரதேசத்திற்குள் தொழிலில் ஈடுபட உரித்துள்ளதுடன், தமது சேவைக்காக கட்டணங்கள் அறவிடவும் உரித்துண்டு.

*பதிவு செய்யப்படாத ஆயுர்வேத சேவைகள் பணியாளர் ஒருவர் சேவையில் ஈடுபடுத்தல் குற்றமாகும்.*

27. (1) எவரொருவராலும் ஒரு நபரை சந்தர்ப்பவசமாக ஆயுர்வேத மருந்து வகைகளை விநியோகஞ் செய்பவராக, ஆயுர்வேத ஊழியராக அல்லது ஆயுர்வேத உடல் (தசை) பிடிப்பவராக தமது செயற்பாட்டை, கருமத்தை செய்வதற்காக இந்நியதிச் சட்டத்தின் கீழ் உரிய முறையில் பதிவு அல்லது அனுமதி இருந்தாலன்றி ஆயுர்வேத சேவைகள்பணியாளாக கருமமாற்றுவதற்காக ஆயுர்வேத நிறுவனமொன்றில் ஈடுபடுத்தல் கூடாது.

(2) ஆயுர்வேத நிறுவனமொன்றின் பதிவு செய்யப்பட்ட உரிமைாளர் ஒருவரால் அந்த ஆயுர்வேத நிறுவனத்தில் சேவையிலுள்ள அனைத்து ஆளணி அங்கத்தவர்களின் பெயர்களை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஆயுர்வேத சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபைக்கு அறிவித்தல் வேண்டும். குறித்த தகவல்கள் உரிய படிவத்தின் பிரகாரம் முன்வைத்தல் வேண்டும்.

(3) (1) ஆவது உபபிரிவில் அல்லது (2) ஆவது உப பிரிவின் கட்டளைகளை மீறுகின்ற எவரொருவராலும் குற்றம் செய்யப்படுவதுடன் நீதிபதியின் முன்னிலையில் வழக்கு நடைபெறுகின்ற சுருக்க விசாரணையில் பின்னர் குற்றவாளியாக்கப்படும் போது இரண்டு இலட்சம் ரூபாய்களுக்கும் கூடாத அபராதத்திற்கு அல்லது 12 மாதங்களுக்குக் கூடாத சிறைவாசத்திற்கு அல்லது இரண்டிற்கும் ஆளாகுதல் வேண்டும்.

*ஆயுர்வேத சேவைகள் பணியாளராக உண்மையாகவே அன்றி முன்வருவது குற்றமாகும்.*

28. (1) ஒரு நபர் ஆயுர்வேத மருந்து வகைகள் விநியோகஞ் செய்பவராக, ஆயுர்வேத ஊழியராக, ஆயுர்வேத உடல் (தசை) பிடிப்பவராக இந்நியதிச் சட்டத்தின் இப்பகுதியின் கீழ் பதிவு செய்யாத சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு -

(அ) ஆயுர்வேத மருந்துகள் விநியோகஞ் செய்பவர், ஆயுர்வேத ஊழியஞ் செய்பவர், ஆயுர்வேத உடல் (தசை) பிடிப்பவர் என்ற பதவிப்பெயர்களுடன் ஆங்கிலப் மொழியில் அல்லது சமமான வேறு மொழி ஒன்றில் தனியாக அல்லது வேறு சொற்களாக அல்லது எழுத்துக்களுடன் பாவித்தல் அல்லது;

(ஆ) தான் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத மருந்து வகைகள் விநியோகஞ் செய்பவர், பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத ஊழியர் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத தாதி, பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத உடல் (தசை) பிடிப்பவர் என உண்மையல்லாத வெளிப்பாடுடைய பெயர் ஒன்றை, பதவிப் பெயர் ஒன்றை சேர்த்தல் அல்லது விபரித்தல் அல்லது பாவனை செய்தல் அல்லது;

(இ) ஆயுர்வேத மருந்துகள் விநியோகஞ் செய்பவர் என, ஆயுர்வேத ஊழியர்களை ஆயுர்வேத உடல் (தசை) பிடிப்பவர் என, ஆயுர்வேத தாதி என உண்மையாகவே அல்லது தன்னைக் காட்டி தமது இலாபத்தை நோக்காகக் கொண்டு தொழில் ஈடுபடுவது அல்லது சிகிச்சை அளித்தல்.

மேற்கண்டவைகளால் ஒருவர் குற்றஞ் செய்வதுடன் நீதிபதியால் நடாத்தப்படும் சுருக்கமான வழக்கு விசாரணையில் குற்றவாயாளிக்கப்படும் போது இரண்டு இலட்சம் ரூபாய்களுக்கு மேற்படாத அபராதத்திற்கும் (தண்டத்திற்கும்) ஆறு மாதங்களுககுக் கூடாத சிறை வாசத்திற்கும் அல்லது அபராதம் சிறைவாசம் ஆகிய இரண்டிற்கும் ஆளாகுதல் வேண்டும்.

29. (1) எவரொருவராலும் அதற்காக சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மாகாண ஆணையாளரின் அல்லது சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையில் எழுத்தினாலான அனுமதியின்றி ஆயுர்வேதம் என்ற சொல்லைப் பாவித்தலாகாது.

*ஆயுர்வேதம் என்ற சொல்லைப் பாவித்தல்.*

(2) (1) ஆவது உப பிரிவின் கருமங்களுக்காக "ஆயுர்வேதம்" எனப் பாவித்தல் என்பதற்கு,-

(அ) ஒரு பதவிப் பெயருக்கு அல்லது பெயரொன்றுக்கு முன்னர் ;

(ஆ) பெயர்ப் பலகை ஒன்றில் அல்லது சமிக்ஞைப் பலகையில்;

(இ) மின்சார அச்சு ஊடகமொன்றினூடாக வெளியாக்குகின்ற வாணிப விளம்பர அறிவித்தல் ஒன்றில் ;

(ஈ) ஒரு அறிவித்தலில் பெயர்ப் பலகை ஒன்றில் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்ட சொல்லைப் பாவித்தல் அல்லது அறிவித்தல்.

(3) இப்பிரிவின் ஏதாவது ஏற்பாடொன்றை மீறுகின்ற எவரும் குற்றம் செய்தவராவதுடன், நீதிமன்ற நீதிபதி அவர்களின் முன்னில் நடைபெறும் சுருக்க வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாக்கப்படும் போது, ஒரு இலட்சம் ரூபாவுக்குக் கூடாத அபராதத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்குக் கூடாத சிறைவாசத்திற்கு அல்லது குறித்த அபராதத்திற்கும் சிறைவாசத்திற்கம் என்ற இரண்டு தண்டனைகளுக்கும் ஆளாகுதல் வேண்டும்.

கட்டளைகள்.

30. (1) மாகாண அமைச்சர் அவர்களால் ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையை ஆலோசித்து கீழ்க்காணும் அனைத்திற்கும் அல்லது சிலவற்றிற்கு கட்டளை (நிபந்தனைகளை) ஆக்கஞ் செய்ய முடியும் :-

(அ) எவரொருவரையும் ஆயுர்வேத சேவைகளுக்காக பணியாட்களுக்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்;

(ஆ) எவரொருவரையும் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஆயுர்வேத சேவைப் பணியாட்களாக பதிவு செய்யத் தேவைப்படும் தகைமைகள்;

(இ) இந்நியதிச் சட்டத்தில் இப்பகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத சேவைப் பணியாள் ஒருவரால் பின்பற்றப்பட வேண்டிய நடத்தை வழிமுறைகள் சட்டங்கள், நிபந்தனைகள்;

(ஈ) உரிய விண்ணப்பப்பத்திரப் படிவங்களும் அதில் அடங்க வேண்டிய விடயங்களும்;

(உ) ஒருவரை ஆயுர்வேத சேவைப் பணியாளாக பதிவு செய்தலும் அதற்காக அளிக்கப்படும் செல்லுபடியாகும் காலமும்;

(ஊ) குறிப்பிட்ட பதிவு செய்தலை நிராகரித்தல் அல்லது செல்லுபடியற்றதாக்குதல் பற்றிய சந்தர்ப்பங்கள்.

(எ) குறிப்பிட்ட பதிவு செய்தலைப் புதுப்பித்தல், நிராகரித்தல் செய்யும் சந்தர்ப்பங்கள்;

(ஏ) அவ்வாறு பதிவு செய்தலுக்காக அல்லது பதிவு செய்தலைப் புதுப்பித்தலுக்காகவுள்ள விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கோ அப்பதிவை செல்லுபடியற்றதாக்குவதற்கோ எதிராக அமைச்சருக்கு முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள்;

(2) (1) ஆவது உபபிரிவின் பிரகாரம் ஆக்கப்படுகின்ற அனைத்து உத்தரவுகளும் (நிபந்தனை) வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டியதுடன் அது வெளியிடப்படுகின்ற திகதியில் அல்லது உத்தரவுகளில் குறிப்பிடக்கூடிய பின்னைய திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தல் வேண்டும்;

(3) (1) ஆவது உப பிரிவின் கீழ் ஆக்கப்படுகின்ற அனைத்து உத்தரவு (நிபந்தனை)களும் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகியதன் பின்னர் அதிவிரைவில் அனுமதிக்காகப் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதாவது உத்தரவு ஒன்று (நிபந்தனை) அதன் கீழ் முன்னர் செய்திருந்த எவருக்கும் பாதகம் ஏற்படாதபடி அவ்வனுமதியிலிருந்து நீக்கஞ் செய்யப்பட்டதாகக் கணிக்கப்படல் வேண்டும்.

(4) ஒரு உத்தரவு நீக்கஞ் செய்யப்பட்டதாக கணிக்கப்படும் திகதி பற்றிய அறிவித்தலை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

## V ஆம் பாகம்

## பொது

ஆயுர்வேத நிறுவனங்களுக்கு ஏற்புடைய குற்றங்கள்.

31. இந்நியதிச் சட்டத்தின் கீழாகக் குற்றமொன்றை ஓர் ஆயுர்வேத நிறுவனத்திற்கோ அல்லது அது ஏற்புடையதாகச் செய்கின்ற போது குறித்த குற்றத்தை செய்தவருக்கு எதிராக அக்குற்றம் சம்பந்தமாகச் செய்யப்படுகின்ற சட்ட நடைமுறைகளுக்கும் பாதகம் ஏற்படாத வகையில் அவ்வாயுர்வேத நிறுவனத்தின் உரிமையாளராக அல்லது பொறுப்பாளராக தற்போது பதிவாகியுள்ள ஒவ்வொருவரும் அக்குற்றம் செய்யப்பட்டது தங்களது அறியாமை காரணமாகவே எனவும் அக்குற்றம் நடைபெறுவதைத் தடுப்பதற்காக தாம் உற்சாகத்துடன் முயற்சி செய்ததாசகவும் அவர் நிரூபித்தால் அக்குற்றத்திற்கு ஆளாக வேண்டியதில்லை.

நானாவிதமான குற்றங்கள்.

32. (1) (அ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை (நிபந்தனை) ஒன்றின் கீழ் தமது அதிகாரங்களை நடைமுறைப்படுத்துகின்ற ஒருவருக்கு நியாயமான காரணங்கள் எதுவுமின்றி இடையூறு செய்தல்.

(ஆ) இந்நியதிச் சட்டத்தின் அதிகார சபையின் கீழ் செயற்படுகின்ற ஒருவர் என்ற வகையில் இந்நியதிச் சட்டத்தின் கீழான அதிகாரங்களை, கருமங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இடையில் அல்லது செயற்படுத்து வதற்குமிடையில் ஏனையவர்களுக்கு இடையூறு செய்கின்ற மற்றவர்களைக் கோபத்திற்கு உள்ளடக்கும் விதத்தில் நடக்கின்ற அல்லது செயற்படுகின்ற ;

(இ) இந்நியதிச் சட்ட அதிகாரத்தின் கீழ் செயற்படுகின்ற ஒருவர் இந்நியதிச் சட்டத்தின் கீழ் தமது அதிகாரங்களை நடைமுறைப்படுத்துகையில், அது தொடர்பான தமக்குக் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்று அத்தகவலை வெளியிடுவதற்காக இந்நியதிச் சட்டத்தின் மூலம் அனுமதியுள்ள கருமம் தவிர வேறு கருமம் ஒன்றிற்காக வேறு ஒருவருக்கு வெளிப்படுத்துகின்ற;!

(எ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் தனக்களிக்கப்பட்ட ஒரு உத்தரவுக்கிணங்க செயற்படுத்தி முன்வைக்க வேண்டிய ஒரு அறிக்கையை அல்லது தகவல் ஒன்றை முன்வைக்க முடியாது போனமை, அல்லது தன்னால் முன்வைக்கப்பட்ட அறிக்கை ஒன்றின் மூலம் அல்லது தகவல் ஒன்றின் மூலம் அறிந்து கொண்டே உண்மையற்ற பிரகடனம் செய்கின்ற அல்லது;

(உ) இந்நியதிச் சட்டத்தின் அல்லதுஅதன் கீழ் ஆக்கப்பட்ட ஒரு நிபந்தனையை அல்லது உத்தரவை மீறுகின்ற இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடு ஒன்றின் கீழ் தமக்களிக்கப்பட்ட உத்தரவைப் பின்பற்றாது இருப்பது.

இவ்வாறான அனைவரும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றத்திற்கு குற்ற வாளியாகின்றனர்.

(2) இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆக்கப்படுகன்ற உத்தரவொன்றின் பிரகாரம் அல்லது தண்டனை ஒன்ற இவ்வாறான வெளியிடப்படாத ஒரு குற்றமொன்றுக்கு ஆளாகும் அனைவரும் நீதிபதியின் முன்னிலையில் நடாத்தப்படும சுருக்கவழக்கு விசாரணையில் குற்றவாளியாக்கப்படும் போது ஒரு இலட்சம் ரூபாவுக்குக் கூடாத அபராதத்திற்கு அல்லது மூன்று மாதங்களுக்குக் கூடாத சிறைவாசத்திற்கு அல்லது அபராதமும் சிறைவாசமும் ஆகிய இரண்டிற்கும் ஆளாகுதல் வேண்டும்.

(3) இந்நியதிச் சட்டமொன்றின் கீழான குற்றமொன்றை, ஒரு குழுவினால் செய்யப்படும் போது,

(அ) குறித்த குழுவினர் கூட்டுத்தாபனமாயின் அக்கூட்டுத்தாபனத்தின் அனைத்துப் பணிப்பாளர்களும் உத்தியோகத்தர்களும்;

(ஆ) அக்குழுவினர் வாணிப வியபாரம் சம்பந்தப்பட்டதாயின், அவ்வாணிப வியாபாரத்தின் அனைத்தும் பங்காளிகளும்

குறித்த குற்றத்திற்காக குற்றவாளியாகக் கணிக்கப்படல் வேண்டும்.

அவ்வாறாயினும் குறித்த பணிப்பாளர் அல்லது உத்தியோகத்தர் குறித்த வியாபாரத்தின் பங்காளர்கள் ஆகியோரால்குறித்த குற்றத்தை தமதுஅறியாமை காரணமாக செய்யப்பட்டதெனவும் அக்குற்றத்தை செய்யாது தடுத்துக் கொள்ள நாம் முயற்சி எடுத்ததாகவும் நிரூபிக்கப்பட்டால், அக்குறிப்பிட்ட குற்றத்திற்காக குற்றவாளியாக்கக் கூடாது.

(4) மாகாணஆணையாளரின் எழுத்து மூலமான அனுமதி பெற்று உத்தியோகத்தர் ஒருவர் அலலது ஊழியர் ஒருவர் இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றம் ஒன்று தொடர்பான வழக்குக்காக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் வழக்கு ஏற்பாட்டுக் கோவை சட்டத்தின் பொருள் கோடல் பிரகாரம் அரச உத்தியோகத்தர் ஒருவராகக் கணிக்கப்படல் வேண்டும்.

## *VI* ஆம் பாகம்

### பொருள் கோடல்

33. சொற்கள் சம்பந்தமாக வேறொரு பொருள்தேவைப்பட்டலான்றி இச்சட்டத்தில், பொருள் கோடல்.

''ஆயுர்வேதம்'' என்பதற்கு ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யூனானி மற்றும் இலங்கைக்கே உரித்தான பாரம்பரிய வைத்திய முறைகளும் வெளிநாடுகளுக்கு உரித்தான மற்றும் முறையே குறித்த வெளிநாடுகளில் சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு வைத்திய முறைகளும் மற்றும் இயற்கையான சமாந்திரமான கீழைத்தேய, அல்லது விருப்பத்திற்குரியதான நோய்களைத் தடுக்கும் முறைகள் அல்லது சமமான பொருள் உள்ள வேறு சுக மேம்பாட்டு முறைகளும் உள்ளடங்கும். ஆயுர்வேதம் என்ற பதத்தை இதன் பிரகாரம் பொருள் எடுத்தல் வேண்டும்.

''ஆயுர்வேத ஊழியர்'' என்பதற்கு இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆயுர்வேத ஊழியனாக பதிவாகியுள்ள ஒருவராவர்;

''ஆயுர்வேத மருந்துவிநியோகஞ் செய்பவர்'' என்பதற்கு இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆயுர்வேத மருந்து வகைகளை விநியோகம் செய்பவராப் பதிவாகியுள்ள ஒருவரைக் குறிக்கும்.

"ஆயுர்வேத ஓய்வு விடுதி" என்பதற்கு இயற்கையான அழகு சௌந்தரியம் உடையதும், தசை (உடல்) பிடித்தல், மருந்து எண்ணெய் பூசுதல், மூலிகை (மர) குளிப்பு, நறுமண வாசனையூட்டப்பட்ட புகை, உணவுக் கட்டுப்பாடு மூலம் சுகாதார உடல், அழகு பேணல், சரீர, மானசீக வளர்ச்சிக்கு ஏற்புடையது என அந்நிறுவனத்தால் காட்டப்படுகின்ற முறை ஒன்றை அல்லது முறைகளை உபயோகித்து ஆயுர்வேத வைத்திய முறைக்கு இணங்க அறிவுரை வழங்கல், பயிற்சி கொடுத்தும், சேவை செய்தல் ஆகியன கொண்ட நிறுவனம் எனப் பொருள்படும்;

"ஆயுர்வேத ஆஸ்பத்திரி" என்பதற்கு நோயென்றால் அல்லது உடல் வலிமையற்றதால் அவதியுறுபவர்களை வரவேற்று அவர்களுக்கு ஊழியம் செய்தல், சிகிச்சை அளித்தலுக்காகப் பாவிக்கப்படும் அல்லது பாவிப்பதற்கான எதிர்பார்ப்புடைய (எவ்வாறு விபரிக்கப்படுமோ) இடமென பொருட்படுவதுடன் ஆயுர்வேத ஊழியர் இல்லம் அல்லது ஆயுர்வேத மகப்பேற்று இல்லம் என்பனவும் அதற்கு உட்படுவதுடன் ஆயுர்வேத உதவி ஒத்தாசை மத்திய நிலையம் ஒன்று உட்படமாட்டாது;

"ஆயுர்வேத உடல் (தசை) பிடிப்பாளர்" என்பதற்கு இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆயுர்வேத உடல் தசை பிடிப்பாளராகப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒருவராவார்;

"ஆயுர்வேத ஔசுசல" என்பதற்கு ஆயுர்வேத மருந்து வகை உற்பத்தி செய்வதற்கு பாவிக்கப்படும் பச்சையான அல்லது உலர்ந்த பொருட்கள், மருந்துச் செடிகள் அவற்றின் பகுதியில் நோய்களைக் கண்டறிவதற்கும், அந்நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கும், சுகப்படுத்துதல், தடுத்தல், குறைத்தல் அல்லது கட்டுப்படுத்துதல் என்பவற்றுக்குப் பாவிக்கப்படும், உபகரணங்கள், ஆயுதங்கள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் விற்பனை செய்தல், விற்பனைக்காக ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்தல், ஆகியவற்றில் ஒன்றை அல்லது பலவற்றைச் செய்வதற்கு ஏற்புடையதாகப் பாவிக்கப்படும இடமெனப் பொருட்படும்;

"ஆயுர்வேத மருந்தகர்" என்பதற்கு இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆயுர்வேத மருந்தகராகப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒருவராவார்;

"ஆயுர்வேத சிகிச்சை நிலயம் அல்லது மருத்துவச்சாலை" என்பதற்கு ஆயுர்வேத வைத்திய முறைகளுக்கு இணங்க ஒருவரை பரிசோதனை செய்தல், அவருககு அறிவுரை வழஙகள், சிகிச்சைத முறையை நிர்ணயித்தல், சிகிச்சை செய்தவருக்காக பாவிக்கப்படும் அல்லது பாவிக்க எதிர்பார்ப்புடைய நிலையமாகும். ஆயுர்வேத ஔசுசல இதற்கு உட்படாது;

"முதலமைச்சர்" என்பதற்கு தென் மாகாண சபையின் பிரதான அமைச்சராவார்;

"மாகாண அமைச்சர்" என்பதற்கு ஆயுர்வேத வைத்திய முறை மற்றும் அது சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றிய விடயங்களுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள தென் மாகாண சபையின் அமைச்சராவார்.

### அட்டவணை

### சட்ட ஒழுங்கமைப்புக் கட்டுப்பாட்டுச் சபைக்கு ஏற்புடையதான ஏற்பாட்டு ஒழுங்கமைப்புகள்.

*சட்ட ஒழுங்கமைப்புக் கட்டுப்பாட்டுச் சபை மாகாண அமைச்சின் பொதுவான அல்லது விசேடமான உத்தரவுகளுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.*

1. இந்நியதிச் சட்டத்தின் கீழ் தமதுஅதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் போதும், காரியங்களையும் கருமங்களையும் செய்யும் போதும், இணக்க சபை மாகாண அமைச்சர் அவர்களால் அவ்வப்போது வெளியிடப்படும் பொதுவான அல்லது விசேடமான உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிதல் வேண்டும்.

*சட்ட ஒழுங் கமைப்பு கட்டுப் பாட்டுச் சபையின் கூட்டங்கள்.*

2. (1) கவனத்தில் எடுப்பதற்காக சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபை முன்வைக்கப்படுகின்ற விடயம் ஒன்று சம்பந்தமாக சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சட்டத்தில் கருமமாற்ற வேண்டியதுடன் அவ்விடயம் சம்பந்தமாக வாக்களிக்கும் உறுப்பினர்களின் கூடிய வாக்குகள் மூலம் முடிவு செய்யப்படும்.

(2) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபை கூட்டமொன்றில் கவனத்தில் எடுக்கப்படும் விடயம் ஒன்று சம்பந்தமாக சமனான வாக்குகள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அக்கூட்டத்தின் தலைவருக்கு தமது வாக்குகள் மேலதிகமாக தீர்ப்பு வாக்கு ஒன்று இருத்தல் வேண்டும்.

(3) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் கூட்டமொன்றில் நடைபெறுகின்ற எந்தவொரு செயற்பாடும் அல்லது முடிவும் அதன் உறுப்பினர் ஒருவரின் தெரிவு அல்லது நியமனம் பற்றிய பிழையொன்று இருப்பதாக அல்லது குறிப்பிட்ட

உறுப்பினர் தகைமையற்றவராக பின்னர் வெளிப்படினும் அதனை வெளியாகாது குறித்த அனைத்து உறுப்பினர்களும் உரிய முறையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்லது நியமிக்கப்பட்டவர்கள் எனவும் உறுப்பினர் ஆகுவதற்கு தகைமை பெற்றவர் என கவனிக்கப்பட்டு செல்லுபடியாகுதல் வேண்டும்.

(4) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் செயற்பாடொன்று அல்லது கருமமொன்று அச்சபையில் வெற்றிடம் ஒன்று இருப்பதன் காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாக இல்லாதிருத்தல் வேண்டும்.

3. சட்ட ஒழுங்கமைப்பு சபையின் உத்தியோகபூர்வமாக நியமனமாகிய உறுப்பினர்கள் அனைவரும் அவ்வுறுப்பினர் அச்சபைக்கு நியமனமாகியது ஒரு உத்தியோகத்திற்காக எனின் அவ்வுத்தியோகத்தை வகிக்கும் காலமெல்லாம் அச்சபையில் பதவி வகிக்க வேண்டும். உத்தியோகபூர்வ மாக நியமனமாகும் உறுப்பினர்கள்.

4. (1) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் நியமன அங்கத்தவர்கள் அனைவரும் அவர் மரணமாதல் அல்லது கேட்டு விலகல் அல்லது வெளியாக்கப்படல் ஆகிய காரணங்களுக்காகப் பதவியை இழந்தாலே தவிர மூன்று வருடங்களுக்குப் பதவி வகிக்க முடியுமாவதுடன் ஒழுக்காற்று விடயமாக வெளியாக்கப்பட்டாலன்றி மீண்டும் நியமனம் அளிக்க தகைமையுடையவராக இருத்தல் வேண்டும். நியமன உறுப்பினர்களும் உரிய ஏற்பாடுகளும்.

(2) முதலமைச்சர் அவர்களால் மாகாண அமைச்சரை கலந்துஆலோசிக்கப்பட்டு அவ்வாறு செய்தல் உசிதம் என எண்ணுவதாயின் நியமன அங்கத்தவர் ஒருவரை வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் உத்தரவு ஒன்றின் மூலம் காரணங் காட்டப்பட்டு நிறுத்தஞ் செய்ய முடியும்.

(3) நியமன அங்கத்தவர் ஒருவருக்கு எவ்வேளையிலும் முதலமைச்சருக்கு கடிதம் மூலம் அறிவித்தல் கொடுத்துவிட்டு கேட்டு விலகிக் கொள்ள முடியுமாவதுடன் அக்கேட்டு விலகுதலை முதலமைச்சர் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் கேட்டு விலகியமை செல்லுபடி ஆகிறது.

(4) நியமன உறுப்பினர் ஒருவர் மரணமடைதல், கேட்டு விலகுதல், பதவியிலிருந்து வெளியேற்றப்படல் என்பன நடைபெற்ற சந்தர்ப்பத்தில் மாகாண அமைச்சர் அவர்களால் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளைக் கவனத்தில் கொள்ளப்பட்டு இக்குறிப்பிட்டவருக்காக கருமமாற்றுவதற்கு வேறொருவரை நியமனஞ் செய்ய முடியும். அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினரால் முன்னைய உறுப்பினரின் எஞ்சிய பதவிக் காலத்திற்காக பதவியில் இருக்க முடியும்.

(5) நோய்வாய்ப்படல் இலங்கையிலிருந்து வெளிநாடு செல்லல் அல்லது வேறு காரணங்களுக்காக நியமன உறுப்பினர் ஒருவருக்கு தமது பதவியில் கருமங்களை ஆற்ற முடியாது போகுமிடத்து மாகாண அமைச்சர் அவர்களால் இந்நியதிச் சட்டத்திற்கிணங்க அவருக்காக கருமமாற்ற வேறொருவரை நியமனஞ் செய்ய முடியும்.

5. (1) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் இலச்சினை அமைச்சர் அவர்களால் அச்சபையின் இணக்கப்பாட்டுடன் முடிவாகின்ற பிரகாரம் ஆதல் வேண்டும். முத்திரை இலச்சினை.

(2) சட்ட (ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் இலச்சினை) -

(அ) அச்சபையினால் அவ்வப்போது முடிவு செய்யும் பிரகாரம் ஒருவரின் அல்லது பல பேர்களின் பொறுப்பில் இருத்தல் வேண்டும்.

(ஆ) தான் பிரசன்னமாக இருந்தமைக்கு அடையாளமாக நிறைவேற்றும் பத்திரத்தில் அல்லது புத்தகத்தில் தமது கையொப்பத்தை இடல் வேண்டும். இச்சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எந்தவொரு நிறைவேற்றுப் பத்திரத்தில் அல்லது புத்தகத்தில் வைத்தல் கூடாது.

6. எவரொருவராவது, உறுப்பினர் ஆவதற்குரிய தகைமை அற்றவர்கள்.

(அ) அவர் பாராளுமன்ற உறுப்பினராக அல்லது மாகாண சபை உறுப்பினராக அல்லது உள்ளூராட்சி மன்றமொன்றில் உறுப்பினராக இருப்பின் அவ்வாறானவர்;

(ஆ) திணைக்களம் அல்லது ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபை மூலம் அல்லது அது போன்ற ஒன்றுக்காகச் செய்யப்பட்ட ஓர் உடன்படிக்கை அல்லது கீழான நேரடி, அல்லது வட்டவளைவான உரிமை ஒன்று, அனுபவித்தல் ஒன்று அல்லது;

(இ) இலங்கையில் அல்லது வெறொரு நாட்டில் அதிகாரமாக செல்லுபடியாகும் ஒரு சட்டத்தின் கீழ் புத்தி சுவாதீனமற்றவர் என இனங்காணப்பட்டிருப்பின் அவ்வாறானவர் என பிரசித்தப்படுத்தப்பட்டிருப்பின்;

(ஈ) இலங்கை அல்லது வேறொரு நாட்டில் அதிகாரமாக செல்லுபடியாகும் சட்டத்தில் சில பொருள் நஷ்டவாளர் என அல்லது பொருள் நஷ்டமடைந்தவர் என பிரசித்தப்படுத்தப்பட்டு விடுதலையாக்கப்படாத ஒருவர்;

(உ) இலங்கையின் அல்லது வேறொரு நாட்டின் நீதிமன்றத்தால் ஒரு குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்பட்டவர்.

மேற்கண்டவர்கள் இச்சபையின் அங்கத்தவர்களாக நியமனஞ் செய்வதற்குஅல்லது உறுப்பினர் ஒருவராக தொடர்ந்தும் செயற்படுத்துவதற்கு தகைமையற்றவர்களாவர்.

கூட்டங்களுக்கு பிரசன்னமாவதற் கான ஊதியம்.

7. இச்சபையின் உறுப்பினர் ஒருவருக்கு கூட்டமொன்றுக்கு பிரசன்னமாவதற்கு மாகாண அமைச்சர் அவர்கள் நிதி விடயத்திற்குப் பொறுப்புடைய மாகாண அமைச்சரைக் கலந்தாலோசனை செய்து முடிவு செய்யப்படும் ஊதியம் ஒன்று வழங்கப்படல் வேண்டும்.

இந்நியதிச் சட்டத்தின் கீழ் இச்சபையின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது எடுக்கப்படும் செயற்பாடுகளின் பாதுகாப்பு.

8. (அ) இச்சபையால் இந்நியதிச் சட்டத்தின் கீழ் நன்நோக்குடன் செய்யப்படுகின்ற அல்லது இச்சபை செய்கின்ற அல்லது உத்தேசிக்கின்ற செயல்களுக்கு இச்சபைக்கு எதிராக, அல்லது

(ஆ) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் உறுப்பினர் ஒருவர்அல்லது உத்தியோகத்தர் ஒருவர் ஊழியர் ஒருவர் பிரதிநிதி ஒருவர் ஆகியோரால் இந்நியதிச் சட்டங்களின் கீழ் இச்சபையின் ஏற்பாடுகளின் கீழ் நன்னோக்குடன் செய்கின்ற அல்லது செய்யப்படுகின்ற, உத்தேசிக்கின்ற ஒரு செயற்பாடு தொடர்பாக அவ்வுறுப்பினர்களுக்கு, உத்தியோகத்தருக்கு ஊழியர்களுக்கு எதிராக எவ்வித சிவில் அலது குற்ற வழக்குக் கருமங்கள் தாக்கல் செய்தல் கூடாது.

9. சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபைக்கு எதிராக முன்வைக்கப்படும் வழக்கு ஒன்றில் இச்சபையின் உறுப்பினர் ஒருவரின் சுயமரியாதைக்கு அல்லது ஆதனத்திற்கு எதிரான பிடியாணை விநியோகித்தல் கூடாது.

சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் உறுப்பினர்களுக்கு எதிராகப் பிடியாணை விநியோகித்தல் கூடாது.

10. சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையை இலஞ்ச சட்டத்தின் பொருள் கோடலின் படி அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றாக கணிக்கப்பட வேண்டியதுடன் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை அதன் பிரகாரம் அறிந்திருத்தல் வேண்டும்.

சட்டங்களை ஆக்கஞ் செய்யும் ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபைக்குரிய அதிகாரங்கள்.

11. (1) சட்ட ஒழுங்கமைப்பு கடடுப்பட்டுச் சபையால் கீழ்க்காணும் அனைத்தும் அல்லது அதன் சிலதும் சம்பந்தமாக அதாவது-

(அ) இந்நியதிச் சட்டத்தின் வேறு ஏதாவது ஏற்பாடுகளின் கீழ் சட்டம் ஆக்கஞ் செய்ய வேண்டுமென தேவைப்படுகின்ற அல்லது அனுமதியளிக்கப்படுகின்ற எந்த ஒரு விடயமும்;

(ஆ) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் கூட்டங்களும் அக்கூட்டத்தில் பின்பற்றப்பட வேண்டிய கருமங்களும் நடைமுறைகளும்;

(இ) சட்ட ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுச் சபையின் கருமங்களும் தொடர்புடைய வேறு விடயங்களும் சம்பந்தமாக சட்டங்கள் ஆக்கஞ் செய்ய முடியும்.

(2) இந்நியதிச் சட்டத்தின் கீழ் இச்சபையல் ஆக்கப்படுகின்ற ஒரு சட்டம், அது அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டாலன்றி ஏற்புடையதாக்க முயற்சித்தலாகாது.

6-463

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.